*World ChristianFellowship*
*www.wcflondon.com*
*wcflondon@gmail.com*

# *காலத்தியர்*
# *பாடம் 05 தேவ கோபாக்கினைக்கு என்று நியமிக்கப்படுதல்*

***காலத்தியர் 1:6-10***

*நாம் கேட்டு, விசுவாசித்து, நம் வாழ்வில் கடைப்பிடக்க வேண்டிய மூன்று முக்கிய காரியங்கள் உண்டு. ஏனென்றால் பவுலின் காலத்திற்கும் நம்முடைய காலத்திற்கும் மிகப்பெரிய வித்தியாசம் ஒன்றும் இல்லை.*

1. *ஒருவர் சுவிசேஷத்தை கேட்டு விசுவாசித்து பிறகு சத்தியத்திற்கு விலகி வாழும்போது சபிக்கப்பட்டவனாகிறார். (வசனம் 6-7).*
2. *தேவன் கொடுத்த சுவிசேஷத்தையல்லாமல் வேறொரு சுவிசேஷத்தை ஒருவன் உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் தூதனானாலும் சரி அப்போஸ்தலன் ஆனாலும் சரி சபிக்கப்பட்டவனாயிருக்கிறான். (வசனம் 1:8-9).*
3. *தேவ ஊழியக்காரன் அல்லது தேவனின் அடிமை தேவனை பிரியப்படுத்தவே சுவிசேஷம் பிரசங்கிக்க வேண்டும் மனுஷனை அல்ல. (வசனம் 10)*

*இந்த நாலு வசனங்களிலும்* ***'சபிக்கப்பட்ட வனாயிருக்கக்கடவன்' என்ற*** *வார்த்தை இரு முறை வருகிரது. கிரேக்க மொழியில் இதை 'அனாத்தெம' (Anathema) என்பர். தேவ கோபாக்கினைக்கு என்றே நியமிக்கப்பட்டவர் என்று*

அர்த்தம். அதனால் தான் இந்த தியானத்திற்கு ‘‘தேவ கோபாக்கினைக்கு என்று நியமிக்கப்படுதல் ‘‘என்று தலைப்பு சூட்டினேன்.

சுவிசேஷம் என்பது இரட்சிப்பை குறித்த நற்செய்தி ஆகும். அதை களங்கப்படுத்துகிற அல்லது தவறாய் உபதேசிப்பவன் சபிக்கப்பட்டவன்.

இப்படிப்பட்ட ஒரு கடினமான பதத்தைத்தான் பவுல் இங்கு உபயோகப்படுத்துகிறார். தேவனுடைய வார்த்தை இங்கு தான் மிகவும் கடினமாக உபயோகப்படுத்தப்பட்டு உள்ளது போல் உள்ளது,ஏனென்றால் தேவனுடைய சுவிசேஷத்தை புரட்டுகிறவன் மேல் இரெட்டதனையாய் சாபம் வரும் என்பது போல் சித்தரிக்கப்பட்டுள்ளது..

சுவிசேஷம் என்பது கிறிஸ்துவுக்குள் இரட்சிப்பின் நற்செய்தி, எப்படியெனில்

- கிருபையின் மூலமாக மட்டுமே
- விசுவாசத்தின் மூலமாக மட்டுமே
- கிறிஸ்துவுக்குள் மட்டுமே,

உண்மையான சுவிசேஷத்தை விசுவாசிப்பதின் மூலமே பாவிகள் நரகத்திற்கு தப்பி பரலோகத்திற்கு செல்ல முடியும்.

சாத்தான் பாவ இருளில் வாழ்பவர்களை குழப்பி விட்டு, அவர்களை வஞ்சித்து சுவிஷத்தை புரட்டி அவர்கள் உண்மையை அறிந்து கொள்ளாமல் தன்னுடைய கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும் என்றே விரும்புகிறான். சாத்தான் அவர்களை நரகத்திற்கு கொண்டு செல்ல ஒரே ஒரு யுக்தியை தான் உபயோகம் செய்தான் இன்றும் செய்து கொண்டு இருக்கிறான் அது என்ன என்றால் உண்மையான சுவிசேஷத்தை புரட்டி மக்களை திசை திருப்பி

*உண்மையில்லாததை நம்ப வைத்து இரட்சிப்பிற்கு வழி வகுக்காததை நம்ப வைத்து விடுகிறான்.*

*நாம் இங்கு வாசித்த வசனங்களில் சுவிசேஷத்தை குறித்து விரிவாக இல்லை ஆனால் காலத்தியரின் மற்ற அதிகாரங்களில் விரிவாக காண முடியும். இந்த பாடப்பகுதியின் நோக்கம் சுவிசேஷத்தை விவரிப்பது அல்ல அதனின் முக்கியத்துவத்தை விவரிப்பது ஆகும்.*

***இப்பகுதியில் அடிப்படை உண்மை:***
***ஒரே ஒரு சுவிசேஷம் தான்.***

*இப்பகுதியானது பரலோகம் செல்ல பல வழிகள் உள்ளது என்ற கோட்பாட்டை வெளிப்படையாக அல்லது நேரிடையாக எதிர்த்து விவரிக்கப்பட்டுள்ளது.*

*பிரபஞ்சத்துவவாதம் (universalism) என்ற கோட்பாடானது அணைத்து மனிதர்களும் காப்பற்றுபட்டு அதாவது தேவனால் இரட்சிக்கப்பட்டு விடுவார்கள் என்று விளக்குகிறது. ஆனால் வேதத்தை சார்ந்த பிரபஞ்சத்துவவாதம் என்ற ஒன்று இல்லை.*

*அதாவது கிறிஸ்துவின் சுவிஷத்தை நிராகரித்து விட்டு ஒரு மனிதன் இரட்சிக்கப்படலாம் அல்லது காப்பாற்றப்படலாம் என்று ஒரு வேத விளக்கம் எங்கும் இல்லை.*

*கிறிஸ்துவத்தை தவிர்த்து மற்ற மதங்கள் இருக்கலாம். இயேசு கிறிஸ்துவை தவிர்த்து மற்ற தலைவர்கள் இருக்கலாம் அனால் இரட்சிப்பை குறித்து நற்செய்தி ஒரே ஒரு சுவிசேஷம் தான்.*

*தெளிவான கோட்பாடு என்பது வேதத்தை சார்ந்த சிந்தனை கொண்டதாய் இருக்க வேண்டும். பரிசுத்த ஆவியானவர் சபையை எல்ல பிழைகளிலிருந்தும் காப்பார் என்ற கூற்று பரவலாக பரவி வருகிறது. இதனால் மக்கள் உண்மையான அல்லது கடினமான சத்தியத்தை விட்டுவிட்டு தங்கள் விசுவாசத்தை காத்துக்கொள்ள தவறுகின்றனர் சமீபத்தில் இதுதான் காலத்திய மற்றும் மத்திய பகுதியில் நடந்தது.*

*இதன் விளைவால் ஒரு தலைமுறையே வேதாகமத்தை தெளிவற்ற மற்றும் அறை குறையாக கற்று கொண்டு தேவனை விட்டும் சபையை விட்டும் விலகி செல்கின்றனர்.*

*கொள்கை மற்றும் விசுவாசத்தில் முக்கியத்துவம் கொடுப்பதால் மட்டுமே சபையை நீண்ட காலம் நடத்த முடியும்.*

*அப்போஸ்தலனாகிய பவுல் இதை எபேசு சபையின் மூப்பருக்கு தெளிவுபடுத்துகிறார்.*

***அப்போஸ்தலர் 20:26**, தேவனுடைய ஆலோசனையில் ஒன்றையும் நான் மறைத்து வைக்காமல், எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தபடியினாலே.*

*நான் தேவனுடைய ஆலோசனையில் ஒன்றையும் நான் மறைத்து வைக்காமல் எல்லாவற்றையும் விவரித்து எச்சரித்தேன். என்னுடைய ஊக்கமான ஜெபம் என்னுடைய மக்கள் மற்றும் அனைவருக்கும் தேவ ஆலோசனையை அறிவிக்கப்படவேண்டும் என்பதே!*

***அப்போஸ்தலர் 20:30**, உங்களிலும் சிலர் எழும்பி, சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக்கொள்ளும்படி மாறுபாடான வைகளைப் போதிப்பார்களென்று அறிந்திருக்கிறேன்.*

நாம் வாழும் காலமாகிய தற்போது, நாம் பொறுமையுடனும் சகிப்புத்தன்மையுடனும் இருக்க வேண்டிய கட்டாயம் ஏனென்றால் அவர்கள் பழைய சிந்தனைகளை அதாவது நாம் எதை வேண்டுமானாலும் நம்பலாம் என்ற கோட்பாட்டை திணிக்கிறார்கள் அதில் உண்மையானது என்று ஒன்று இல்லை. நீங்கள் நம்பும் உண்மை ஒன்று உண்டு, நான் நம்புவது ஒன்று உண்டு, யாரும் மற்றவர்களின் நம்பிக்கையிலோ, மதம் சார்ந்த கோட்பாடுகளிலோ தலையிடக்கூடாது.

பவுல் அனைவரின் கூற்றையும் ஏற்றுக்கொள்ள மறுக்கிறார், அவர் அதை நிராகரிக்க கொஞ்சமும் தயக்கமோ, வருத்தமோ தெரிவிக்கவில்லை. பவுல் இங்கு தெய்வீக தண்டனை பற்றி மிகவும் கடுமையாக, தைரியமாக, எந்த வித பாரபட்சம் பாக்காமல் எடுத்து உரைக்கிறார்.

- வெளிப்படையாக,
- வாதாடும் வகையில்,
- தெளிவாக, மற்றும்
- வார்த்தைகளை மிகவும் கடினமாக உச்சரிக்கிறார்.

நாம் இந்த மாதிரியான ஒரு உபதேசத்தை அல்லது பிரசங்கத்தை இப்பொழுது காணமுடிவதில்லை இது மிகவும் அவசியமான ஒன்று, ஏனென்றால் இரட்சிப்பிற்கு அதுவே வழி வகுக்கும். இரட்சிப்பு உண்மையான சுவிசேஷத்தை நம்புவதன் மூலமே உண்டாகும்.

## சத்தியத்தை விட்டு விலகுவது ஆச்சர்யமான அல்லது அதிர்ச்சியானது

*பவுல் இங்கு எந்த ஒரு வாழ்த்துதலுடனும் துவங்கமால் நேரிடையாக கடுமையாக எழுதுகிறார், ஏனென்றால் சுவிசேஷம் அவ்வாறு தாக்கப்பட்டதை கண்டு பவுல் நெஞ்சில் பாரம் கொண்டார்.*

*பவுல் இந்த இடத்திற்கு மூன்று முறை பயணம் செய்துள்ளார், அங்கு தன்னுடைய நேரத்தை அவர்களோடு செலவழித்து உள்ளார். அதனால் அவர் அதிர்ச்சியடைந்து உள்ளார்.*

***முதலாவது அவர்கள் தேவனை விட்டு விலகினர்:** வசனம் 6, தேவன் தந்த சுவிசேஷத்தை விட்டு விலகுவது இந்த காலத்திய நாட்டில் சீக்கிரமே நடந்தது. அவர்கள் சுவிசேஷத்தை விட்டு விலகுவது மட்டும் அல்ல தேவனிடம் இருந்தும் விலகினார்கள்.*

***1யோவான்2:18-19**, 18. பிள்ளைகளே, இது கடைசிக் காலமாயிருக்கிறது; அந்திக்கிறிஸ்து வருகிறானென்று நீங்கள் கேள்விப்பட்டபடி இப்பொழுதும் அநேக அந்திக்கிறிஸ்துகள் இருக்கிறார்கள்; அதினாலே இது கடைசிக்காலமென்று அறிகிறோம். 19. அவர்கள் நம்மைவிட்டுப் பிரிந்து போனார்கள், ஆகிலும் அவர்கள் நம்முடையவர் களாயிருக்கவில்லை; நம்முடையவர்களாயிருந்தார்களானால் நம்முடனே நிலைத்திருப்பார்களே; எல்லாரும் நம்முடையவர்களல்லவென்று வெளியாகும்படிக்கே பிரிந்துபோனார்கள்.*

*காலத்திய சபையில் கள்ள விசுவாசிகள் இருந்து இருப்பார்களானால் அவர்கள் முழுவதும் கள்ள*

*உபதேசத்தால் நிறைந்தவர்களாவே இருந்து இருப்பர். ஏனென்றால் அவர்கள் சபையை சேர்ந்தவர்கள் அல்ல.*

**இரண்டாவதாக அவர்கள் தேவ கிருபையை விட்டு விலகினார்கள்.**

***காலத்தியர் 5:4****, நியாயப்பிரமாணத்தினால் நீதிமான்களாக விரும்புகிற நீங்கள் யாவரும் கிறிஸ்துவைவிட்டுப் பிரிந்து கிருபையினின்று விழுந்தீர்கள்.*

*இயேசு கிறிஸ்து அவர்களின் பாவத்திற்காக மரித்ததை மிகவும் அழகாக சித்தரித்து விளக்கிய பின்பும், அவர்கள் சுவிசேஷத்தை விட்டு விலகியது பவுலிற்கு அதிர்ச்சியளிப்பதாக இருந்தது.*

***காலத்தியர் 3:1****, புத்தியில்லாத கலாத்தியரே, நீங்கள் சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமற்போகத்தக்கதாக உங்களை மயக்கினவன் யார்? இயேசுகிறிஸ்து சிலுவையிலறையப் பட்டவராக உங்கள் கண்களுக்குமுன் பிரத்தியட்சமாய் உங்களுக்குள்ளே வெளிப்படுத்தப்பட்டிருந்தாரே?*

*உண்மையான விசுவாசிகளை பொதுவாக இணைப்பது எது?*
***காலத்தியர் 3:2****, ஒன்றைமாத்திரம் உங்களிடத்தில் அறியவிரும்புகிறேன்; நியாயப்பிரமாணத்தின்கிரியை களினாலேயோ, விசுவாசக் கேள்வியினாலேயோ, எதினாலே ஆவியைப் பெற்றீர்கள்?*

*ஒரு நபர் இரட்சிக்கப்படும் போது என்ன நடக்கிறது?*

*ஒரு நபர் சுவிசேஷத்தை விசுவாசித்து, நீதிமானாக்கப்பட்டு மாற்றப்பட்டபோது, தேவன் அந்த விசுவாசிக்கு பரிசுத்த ஆவியானவரை கொடுக்கிறார்.*

*எனவே பவுல் இங்கு பரிசுத்த ஆவியானவரை பெற்றுக்கொண்ட விசுவாசிகளை பற்றி பேசுகிறார்.*

***காலத்தியர் 3:3-4**, 3. ஆவியினாலே ஆரம்பம்பண்ணின நீங்கள் இப்பொழுது மாம்சத்தினாலே முடிவுபெறப்போகிறீர்களோ? நீங்கள் இத்தனை புத்தியீனரா?4. இத்தனை பாடுகளையும் வீணாய்ப் பட்டீர்களோ? அவைகள் வீணாய்ப்போயிற்றே.?*

*அவர்கள் விசுவாசிகள்.*
*அதனால் என்ன ஆபத்து?*
*அவர்கள் அடைந்த இரட்சிப்பை இழக்கப்போவதில்லை.*

*இன்னும் துல்லியமாக சொல்லப்போனால் இந்த நிலையில் தான் தற்போது சுவிசேஷ சபைகள் உள்ளன.*
*அந்த சபையில் உள்ளதால் அவர்கள் இரட்சிக்கப்படவில்லை என்று அர்த்தம் அல்ல அவர்கள் கிருபையின் மூலமாய் விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டார்கள்.*

*அவர்கள் விசுவாசத்தால் தேவ ஆவியை பெற்றார்கள். அவர்கள் தங்களை ஒடுக்கிய கள்ள உபதேசத்தை சகித்தார்கள், அவையாவன*

- *விசுவாசத்தை குறித்து,*
- *ஞானஸ்நானம் பெற்றால் தான் விசுவாசம் என்றும்,*
- *விசுவாசத்திற்கு சில சடங்குகள் உள்ளது என்றும்,*
- *விசுவாசத்திற்கு சில நடைமுறைகள் உள்ளது என்றும்,*
- *கிருபையை பெற நீங்கள் சில கிரியைகளை செய்ய வேண்டும் போன்ற கள்ள உபதேசங்கள் இருந்தன.*

*இன்று கிறிஸ்தவத்தில் இருக்கும் பிரிவுகளை பவுல் இருந்து இருந்தால் சகித்துக்கொள்ளமாட்டார்.*

*நீங்கள் சத்தியத்தை விட்டு விலகினால் உங்களை கிருபையாய் அழைத்த கிறிஸ்துவாகிய தேவனை விட்டும் நீங்கள் விலகுகிறீர்கள் என்று பவுல் சொல்லுகிறார்.*

*தேவன் – "அவர்தான் உங்களை அழைத்தார்."*

***ரோமர் 8:30,*** *எவர்களை முன்குறித்தாரோ அவர்களை அழைத்துமிருக்கிறார்; எவர்களை அழைத்தாரோ அவர்களை நீதிமான்களாக்கியுமிருக்கிறார்; எவர்களை நீதிமான் களாக்கினாரோ அவர்களை மகிமைப்படுத்தியுமிருக்கிறார்*

***2 தெசலோனிக்கேயர் 2:13-14,*** *13.* ***கர்த்தருக்குப்*** *பிரியமான சகோதரரே, நீங்கள் ஆவியினாலே பரிசுத்தமாக்கப் படுகிறதினாலும், சத்தியத்தை விசுவாசிக்கிறதினாலும் இரட்சிப்படையும்படிக்கு, ஆதிமுதல் தேவன் உங்களைத் தெரிந்து கொண்டபடியினாலே, நாங்கள் உங்களைக்குறித்து எப்பொழுதும் தேவனை ஸ்தோத்திரிக்கக் கடனாளிகளாயிருக்கிறோம். 14. நீங்கள் நம்முடைய* ***கர்த்தராகிய*** *இயேசுகிறிஸ்துவின் மகிமையை அடையும்பொருட்டாக எங்கள் சுவிசேஷத்தினாலே அந்த இரட்சிப்புக்கு அவர் உங்களை அழைத்தார்.*

***2 தீமோத்தேயு 1:9,*** *அவர் நம்முடைய கிரியைகளின்படி நம்மை இரட்சிக்காமல், தம்முடைய தீர்மானத்தின்படியும், ஆதிகாலமுதல் கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியும், நம்மை இரட்சித்து, பரிசுத்த அழைப்பினாலே அழைத்தார்.*

***காலத்தியர் 5:7-10,*** *7. நீங்கள் நன்றாய் ஓடினீர்களே; சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமற்போக உங்களுக்குத் தடைசெய்தவன் யார்?8. இந்தப் போதனை உங்களை அழைத்தவரால் உண்டானதல்ல.9. புளிப்புள்ள*

*கொஞ்சமாவானது பிசைந்த மாவனைத்தையும் உப்பப்பண்ணும்.*

***எரேமியா 2:13***, *என் ஜனங்கள் இரண்டு தீமைகளைச் செய்தார்கள்; ஜீவத்தண்ணீர் ஊற்றாகிய என்னை விட்டுவிட்டார்கள்; தண்ணீர் நிற்காத தொட்டிகளாகிய வெடிப்புள்ள தொட்டிகளை தங்களுக்கு வெட்டிக் கொண்டார்கள்.*

*"என்னை விட்டு ஏன் கள்ள உபதேசங்களுக்கு திரும்பினீர்கள்?"*

*பவுல் இதை குறித்து தான் மிகவும் கவலைப்படுகிறார், அதாவது நீங்கள் இரட்சிப்பை இளப்பீர்கள் என்று அல்ல, உங்களை இரட்சிக்காத ஒன்றை நீங்களும் ஏற்றுக்கொள்கிறீர்கள். அப்படி இருக்கும் போது உங்களை இரட்சிக்காத உபதேசத்தை ஏற்றுக்கொண்டீர்களே என்று காலத்தியர்களை குறித்து மிகவும் ஆச்சரியப்படுகிறார்.*

***வசனம்****7, வேறொரு சுவிசேஷம் இல்லையே*

*வேறொரு சுவிசேஷத்தை ஒரு சின்ன மாறுதலால் தான் கண்டு பிடிக்க முடியும்.*
*உண்மையான சுவிசேஷம் கீழ்கண்டவற்றை வெளிப்படுத்துகிறது,*

- ✓ *உண்மையான கிறிஸ்து,*
- ✓ *உண்மையான தேவன்,*
- ✓ *இது கிருபையினால் வந்தது என்று,*
- ✓ *இது விசுவாசத்தால் மட்டுமே கிரியை செய்கிறது*
- ✓ *இயேசு சிலுவையில் முடித்த காரியங்கள்*

*இந்த காரியங்களை சேதப்படுத்தாதீர்கள்*

*இங்கு பிரச்சினை என்னவென்றால் எருசலேம் சென்று வந்தவர்கள் சுவிசேஷத்தோடு தங்கள் எண்ணங்களையும் சேர்த்து உபதேசிக்கின்றனர். இப்படிப்பட்ட காரியங்கள் உண்மையான சுவிசேஷத்தை சேதப்படுத்த அனுமதிக்க வேண்டாம்.*

*காலத்தியர்கள் எருசலேமில் இருந்துவந்த யூதர்களின் கட்டலைகளை கேட்டு குழம்பினர். அவர்கள் கிருபையும் கிரியையும் மற்றும் விசுவாசமும் கிரியையும் என்று போதித்தனர். இதனால் அவர்கள் சுவிசேஷத்தை விட்டு விலகினர்.*

***காலத்தியர் 5:2-4**, 2. இதோ, நீங்கள் விருத்தசேதனம் பண்ணிக்கொண்டால் கிறிஸ்துவினால் உங்களுக்கு ஒரு பிரயோஜனமுமிராது என்று பவுலாகிய நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்.3. மேலும், விருத்தசேதனம் பண்ணிக் கொள்ளுகிற எந்த மனுஷனும் நியாயப்பிரமாணம் முழுவதையும் நிறைவேற்றக் கடனாளியாயிருக்கிறான் என்று மறுபடியும் அப்படிப்பட்டவனுக்குச் சாட்சியாகச் சொல்லுகிறேன்.4. நியாயப்பிரமாணத்தினால் நீதிமான்களாக விரும்புகிற நீங்கள் யாவரும் கிறிஸ்துவைவிட்டுப் பிரிந்து கிருபையினின்று விழுந்தீர்கள்.*

*பவுல் உங்களுக்கு சொல்லுகிறார் நீங்கள் விருத்தசேதனத்தை ஏற்றுக்கொண்டால் கிறிஸ்துவினால் உங்களுக்கு எந்த பயனும் இல்லை. விருத்தசேதனத்தை நீங்கள் ஏற்றுக்கொண்டால் அது உங்கள் இரட்சிப்பிற்கு ஏதோ துணை செய்கிறது என்று நீங்கள் நினைப்பதாக அர்த்தம், அப்படியென்றால் கிறிஸ்துவால் உங்களுக்கு எந்த பயனும் இல்லை. நீங்களே உங்கள் இரட்சிப்பை ரத்து செய்தீர்கள் என்று அர்த்தம்."*

*ஞானஸ்நானத்திற்கு பதிலாக விருத்தசேதனமா??*
*கள்ள உபதேசம் நுழைந்து விடாத படி சபையானது ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும்.*

## அழிவை குறித்து தெய்வீக எச்சரிக்கை

***வசனம் 8 & 9***
***வசனம்** 7, நாங்களாவது*

***வசனம்** 7, வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது,*

*வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்.!"*

*அவர்கள் யாராக இருந்தாலும் சரி, அவர்களுக்கு நரகம் நிச்சயம்.*

*மக்கள் ஏன் கள்ள உபதேசங்களுக்கு நேராய் சாய்கிறார்கள்?*
*அதை உபதேசிக்கிறவர்களின் தோற்றம் அப்படிப்பட்டது.*

- ✓ *அவர்கள் மத போதகராய் உள்ளனர்,*
- ✓ *தன்னை மதவாதிகளாய் காட்டிக்கொள்கின்றனர்,*
- ✓ *மதங்களை கடைபிடிக்கிறவர்களாய்,*
- ✓ *வணங்கத்தக்கவர்களாய்,*
- ✓ *மிகவும் நல்லவர்களாய்,*
- ✓ *மிகவும் அன்பானவர்களாய் மற்றும்*
- ✓ *மனிதநேயமிக்கவர்களாய் காண்பித்துக்கொள்வர்*

*பவுல் அவர்களை குறித்து சொல்லுகிறார் அவர்கள் யாராக இருந்தாலும் எவராக இருந்தாலும் எனக்கு கவலை இல்லை என்று.*

*அவர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டாம்.*

*நாம் வாழும் இக்காலத்திலும் அநேக கள்ள உபதேசங்களை மக்கள் பின்பற்றுகின்றனர்.*
*ஏன் தெரியுமா?*
*அது அவர்களுக்கு மகிழ்ச்சியை கொடுக்கிறது.*

***வசனம் 9 ல் பவுல் மறுபடியும் எழுதுகிறார்***
*அவர் இங்கு மிகவும் கோபமாக, கடுமையாக தாக்கும் வார்த்தைகளை உபயோக படுத்துகிறார். ஏனென்றால் சுவிசேஷம் அவ்வளவாக சேதப்படுத்தப்படுகிறது.*

*சபையில் உள்ள மக்கள் சுவிசேஷத்தின் தெளிவை இழந்து கள்ள உபதேசத்தை சகித்து கொள்ளும் நிலையில் உள்ளனர். இது சபையிலே நடப்பது தான் சோகம் அளிக்கிறது.*

*பழைய ஏற்பாட்டில் மக்கள் தேவனை விட்டு அடிக்கடி விலகியதால், தேவன் அவர்கள் மேல் சாபத்தை பல முறை கூறி இருப்பதை காணமுடியும்.*

*புதிய ஏற்பாட்டில் இயேசு எருசலேமிற்கு போகிற வழியில் ஒரு அத்தி மரத்தை பார்த்து சபிப்பததை மாற்கு 11ல் காண முடியும். சீஷர்கள் மறுநாளில் அந்த அத்தி மரத்தை பார்த்த பொது அது முழுவதும் பட்டு போனதை கண்டனர். இஸ்ரவேல் மேசியா இயேசுவை ஏற்றுக்கொள்ளாததால் அந்த தேசத்தின் மேல் சாபம் வந்தது என்ற தெய்வீக வெளிப்பாட்டை காண முடியும் தேவனை மகிழ்விக்கும் காரியங்களை நாம் செய்யாத போது நம்மேல் தேவ கோபம் மிகவும் கடுமையானதாகவும் நித்தியமாகவும் வரும்.*

*ஒரு சிலர் நினைக்கலாம் "அதான் பழைய ஏற்பாட்டில் உள்ள எல்ல சாபத்தையும் இயேசு சிலுவையில் சுமந்து தீர்த்து விட்டாரே பிறகு இன்றுமா தேவன் சபிப்பதையும்*

*நியாத்தீர்ப்பு கொடுப்பதையும் மற்றும் அழிப்பதையும் ஒழிப்பதையும் தொடருவார்?" என்று,*

***1 கொரிந்தியர் 16:22,***
*ஒருவன் **கர்த்தராகிய** இயேசுகிறிஸ்துவினிடத்தில் அன்புகூராமற்போனால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன், **கர்த்தர்** வருகிறார்!*

*பவுல் அனைத்தெமா 'Anathemo' என்ற கிரேக்க வார்த்தையை மீண்டும் உபயோகிக்கிறார்.*

*கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மேல் அன்பு கூறாதவன் மேல் நியாத்தீர்ப்பு வரும். நீங்கள் எந்த மதத்தை சேர்ந்தவராயினும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மேல் அன்புகூராவிட்டால் உங்கள் மேல் சாபம் வரும்.*

***சபிக்கப்படுதல் என்றால் என்ன?***
***ரோமர் 9:3,** மாம்சத்தின்படி என் இனத்தாராகிய என் சகோதரருக்குப் பதிலாக நானே கிறிஸ்துவைவிட்டுச் சபிக்கப்பட்டவனாகவேண்டுமென்று விரும்புவேனே.,*

***கிறிஸ்துவை விட்டு நிரந்தரமாக விலகுவதே சாபம் என்று இங்கு பவுல் குறிப்பிடுகிறார்!***

***மத்தேயு** 25:41, "அப்பொழுது, இடதுபக்கத்தில் நிற்கிறவர்களைப்பார்த்து அவர்: சபிக்கப்பட்டவர்களே, என்னைவிட்டு, பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள்.*

*அதாவது கிறிஸ்துவின் சமூகம் மற்றும் பிரசன்னத்திலிருந்து விலகி பிசாசுக்கும் அவன் தூதர்களுக்கும் நியமிக்கப்பட்ட நித்திய நரகத்திற்கு.*

*ஆம் அங்கு தான் சபிக்கப்பட்டவர்கள் அனுப்பப்படுவார்கள்.*

- *பழைய ஏற்பாட்டில் இருந்த சபிக்கப்பட்டவர்கள் இப்பொழுது அங்கு தான் உள்ளனர்.*
- *இயேசு கிறிஸ்து வாழ்ந்த போது அவரை நிராகரித்தவர்கள் இப்பொழுது அங்கு தான் உள்ளனர்.*
- *அப்போஸ்தலர் காலத்தில் கள்ள உபதேசத்தை பிரசங்கித்தவர்கள் இப்பொழுது அங்கு தான் உள்ளனர்.*
- *பவுல் இங்கு காலத்தியரில் எழுதுகிறார் பிசாசுக்கும் அவன் தூதர்களுக்கும் மற்றும் தேவனையும் கிறிஸ்துவையும் விட்டு விலகுகிறவர்களுக்கும் ஏற்கனவே விலகியவர்களுக்கும் நித்திய நரகம் நியமிக்கப்பட்டு உள்ளது என்று.*

*மனித வரலாற்றில் யாரெல்லாம் விசுவாசத்தின் மூலமாக கிறிஸ்துவினிடம் வந்து அவர் மீது அன்பு செலுத்தாமல் அவரை ஆண்டவராகவும் இரட்சகராகவும் ஏற்று கொள்ளாத அனைவர்க்கும் நித்திய நரகம் நியமிக்கப்பட்டுள்ளது. அதில் எந்த மாற்றமும் இல்லை!*

- *பழைய ஏற்பாட்டில் தேவனை கனவீனம் பண்ணியவர்கள் சபிக்கப்பட்டவர்கள்.*
- *சுவிசேஷத்தின் தேவனை கனவீனம் பண்ணியவர்கள் சபிக்கப்பட்டவர்கள்.*
- *இயேசு கிறிஸ்துவை நிராகரித்தவர்கள் சபிக்கப்பட்டவர்கள்.*
- *சுவிசேஷத்தை புரட்டியவர்கள் சபிக்கப்பட்டவர்கள்.*
- *கள்ள உபதேசத்தை பரப்பியவர்கள் சபிக்கப்பட்டவர்கள்.*

*பவுல் இங்கு சொல்லும் சாபமானது மிகவும் உக்கிரம் நிறைந்தது அது சுவிசேஷத்தை குலைக்கிற அனைவர்க்கும் பொருந்தும்.*

*ஏனென்றால் சுவிசேஷம் அறிவிக்கின்ற கிறிஸ்தவர்கள் வேதத்தை உபதேசிக்கிறோம் என்று சொல்லி வேதத்தில் இல்லாததை சொல்லி சுவிசேஷத்தை குலைத்து தவறானதை செய்ய ஊக்குவிப்பதை இந்த காலக்கட்டத்தில் காணமுடியும் குறிப்பாக தற்போது உள்ள கலாச்சாரத்தில்.*

*எனவே இங்கு நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?*
*கிறிஸ்துவின் கிரியையை பயனற்றதாக்காதீர்கள்.*
*கிறிஸ்துவின் மரணத்தை வீணாக்காதீர்கள்.*
*ஒருவர் கிறிஸ்துவின் சுவிசேஷத்தின் மீது கிரியை செலுத்தினால் தான் இரட்சிக்கப்பட முடியும் என்று நினைக்க வேண்டாம்.*

*இயேசு கிறிஸ்துவின் கிரியையே போதுமானது அவரே எல்லாவற்றையும் முடித்து விட்டார்.*

- *உண்மைக்கு முகமூடி போடக்கூடாது.*
- *உண்மையை வளைக்க அல்லது மாற்ற முயற்சிக்கக்கூடாது.*
- *அதை இருப்பதை மீறி விரிவு படுத்தவும் கூடாது.*

## ***ஆண்டவரை பிரியப்படுத்த நாடுங்கள் மனுஷனையல்ல***

*சுவிசேஷத்தின் மீதான தாக்குதல் என்பது ஆதி முதலே மிகவும் கடுமையானதாக இருந்தது இப்பவும் இருக்கின்றது.*

*காலத்திய புத்தகம் என்பது புதிய ஏற்பாட்டில் இரண்டாவது எழுதப்பட்ட புத்தகம் ஆகும்.*

*ஏற்கனவே சுவிசேஷத்தை விட்டு நிறையே பேர் பிரிந்த நிலையில் சாத்தானும் அவன் தூதர்களும் அவனால் தூண்டப்பட்ட மனிதர்களும் இன்றுவரை அதை தொடர்ந்து செய்து கொண்டு வருகின்றனர்.*

*பவுல் கொரிந்து சபைக்கு எழுதுகிறார்,*
***2 கொரிந்தியர்11:2-4**, 2. நான் உங்களைக் கற்புள்ள கன்னியாகக் கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு ஒப்புக்கொடுக்க நியமித்தபடியால், உங்களுக்காக தேவவைராக்கியமான வைராக்கியங்கொண்டிருக்கிறேன்.3. ஆகிலும், சர்ப்பமானது தன்னுடைய தந்திரத்தினாலே ஏவாளை வஞ்சித்ததுபோல, உங்கள் மனதும் கிறிஸ்துவைப்பற்றிய உண்மையினின்று விலகும்படி கெடுக்கப்படுமோவென்று பயந்திருக்கிறேன்.4. எப்படியெனில், உங்களிடத்தில் வருகிறவன் நாங்கள் பிரசங்கியாத வேறொரு இயேசுவைப் பிரசங்கித்தானானால், அல்லது நீங்கள் பெற்றிராத வேறொரு ஆவியையும், நீங்கள் ஏற்றுக்கொள்ளாத வேறொரு சுவிசேஷத்தையும் பெற்றீர்களானால், நன்றாய்ச் சகித்திருப்பீர்களே.!*

*சாத்தன் எப்படி தந்திரமாய் கிரியை செய்வான் என்று எனக்கு தெரியும், அவன் ஏவாளை தந்திரமாய் வஞ்சித்து போல உங்களையும் வஞ்சிப்பான். அப்பொழுது நீங்களும் உங்க சிந்தனைகளில் கிறிஸ்துவிடம் உள்ள அந்த தெய்வீக வைராக்கியத்தை விட்டு நழுவிப்போவீர்கள் என்று கொரிந்து சபைக்கு எழுதுகிறார்*

- *நீங்கள் கள்ள கிறிஸ்துவை ஏற்றுக்கொள்கிறீர்கள்,*

- *கள்ள பரிசுத்த ஆவியையும் சுவிசேஷத்தையும் ஏற்றுக் கொள்கிறீர்கள்.*
- *நீங்கள் இதிலே நீடித்து இருக்க விருப்பப்படுகிறீர்கள்.*

*இது எனக்கு தடுமாற்றமாய் இருப்பதால் நான் ஐயம் கொள்கிறேன்.*

***2 கொரிந்தியர் 11:13-15**, 13. அப்படிப்பட்டவர்கள் கள்ள அப்போஸ்தலர்கள், கபடமுள்ள வேலையாட்கள், கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலரின் வேஷத்தைத் தரித்துக் கொண்டவர்களாயிருக்கிறார்கள்.14. அது ஆச்சரியமல்ல, சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக் கொள்வானே.15. ஆகையால் அவனுடைய ஊழியக்காரரும் நீதியின் ஊழியக்காரருடைய வேஷத்தைத் தரித்துக் கொண்டால் அது ஆச்சரியமல்லவே; அவர்கள் முடிவு அவர்கள் கிரியைகளுக்குத்தக்கதாயிருக்கும்.*

*அவர்கள் நீதியின் சேவைக்காரர்கள் போல் வேஷம் தரித்ததினால் சபிக்கப்பட்டவர்கள்.*

***2 பேதுரு 2: 12-20**,*
*ஏற்கனவே இவைகளை செய்து வருகிற கள்ள தீர்க்கதரிசிகளை மிகவும் கடினமாக பேதுரு இங்கு எச்சரிக்கிறார் மற்றும் சாபத்தை கூறுகிறார்.*

*யூதாவும் அதை குறித்து எழுதி இருக்கிறார்.*

*கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும் வெளிப்படுத்தின விசேஷங்கள் அதிகாரங்கள் 2 மற்றும் 3ல் சபைகளுக்கு கடிதம் எழுதும் போது கள்ள போதர்கர்களை குறித்து எழுதுவதை*

*பார்க்கும் போது அவர்கள் எவ்வளவாய் சபையை ஆக்கிரமித்து உள்ளனர் என்று புரிந்துக்கொள்ள முடியும்.*

*எருசலேமில் உள்ள ஆலயத்தில் தலைவர்களும் அப்போஸ்தலர்களும் கடைசியாக ஒரு முறை சந்திப்பதை அப்போஸ்தலர் நடபடிகளில் காண முடியும்.*

*அவர்கள் சுவிசேஷத்தின் சாராம்சத்தையும், உலகம் முழுவதும் பிரசங்கிக்க போகிறதை குறித்தும் இறுதியான முடிவு எடுத்தனர்.*

***சந்திப்பின் விவாதம்:***

***அப்போஸ்தலர் 15: 1**, சிலர் யூதேயாவிலிருந்து வந்து: நீங்கள் மோசேயினுடைய முறைமையின்படியே விருத்தசேதன மடையாவிட்டால் இரட்சிக்கப்படமாட்டீர்கள் என்று சகோதரருக்குப் போதகம்பண்ணினார்கள்.''*

***பேதுருவின் பதில்***

***அப்போஸ்தலர் 15:6-10**, 6. அப்போஸ்தலரும் மூப்பரும் இந்தக் காரியத்தைக் குறித்து ஆலோசனைபண்ணும்படி கூடினார்கள்.7. மிகுந்த தர்க்கம் உண்டானபோது, பேதுரு எழுந்து, அவர்களை நோக்கி: சகோதரரே நீங்கள் அறிந்திருக்கிறபடி புறஜாதியார் என்னுடைய வாயினாலே சுவிசேஷ வசனத்தைக் கேட்டு விசுவாசிக்கும்படி தேவன் அநேக நாட்களுக்கு முன்னே உங்களில் ஒருவனாகிய என்னைத் தெரிந்துகொண்டார்.8. இருதயங்களை அறிந்திருக்கிற தேவன் நமக்குப் பரிசுத்த ஆவியைத் தந்தருளினதுபோல அவர்களுக்கும் தந்தருளி, அவர்களைக் குறித்துச் சாட்சிகொடுத்தார்; 9. விசுவாசத்தினாலே அவர்கள் இருதயங்களை அவர் சுத்தமாக்கி, நமக்கும் அவர்களுக்கும் யாதொரு வித்தியாசமுமிராதபடி செய்தார்.10. இப்படியிருக்க, நம்முடைய பிதாக்களாலும் நம்மாலும் சுமக்கக்கூடாதிருந்த*

*நுகத்தடியைச் சீஷர் கழுத்தின்மேல் சுமத்துவதினால், நீங்கள் தேவனைச் சோதிப்பானேன்?*

*தேவன் அவர்கள் இருதயத்தை அறிந்து தங்கள் இரட்சிப்பின் உண்மையை பரிசோதித்துக்கொள்ள அவர்களுக்கு பரிசுத்த ஆவியை கொடுத்தார்.*

*இப்பொழுது எருசலேமிலிருந்து மக்கள் வந்து கள்ள உபதேசத்தை பரப்புகின்றனர். அதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் அப்போஸ்தலனாகிய பவுல் காலத்தியரில் மிகவும் கடினமான வார்த்தைகளை உபயோகித்து சுவிசேஷத்தை புரட்டுகிறவர்கள் அடைய போகும் நித்திய ஆக்கினை குறித்து எச்சரிக்கிறார். அவர்கள் சொல்லுகிறது என்னவெனில் இயேசு கிறிஸ்து தான் இரட்சகர் அனால் நீங்கள் இரட்சிக்கப்பட விருத்தசேதனம் பண்ணவேண்டும். அது மட்டுமில்லாமல் விசுவாசம் மட்டும் வைத்தால் போதும் என்று சொல்லாமல் நீங்கள் மோசேயின் நியாயப்பிரமணங்களை கடைபிடிக்க வேண்டும் என்றும் உபதேசித்தனர்.*

*பவுல் உண்மையான உபதேசத்துக்கு வந்த அச்சுறுத்தலை பார்த்தார்.*

*அவர் அதை சாதாரணமான ஒன்றாக எண்ணவில்லை.*

*விருத்தசேதனம் பண்ணுவதால் என்ன?*
*ஓய்வு நாளை அனுசரித்தால் என்ன?*
*அவர்கள் விழாக்களையும் பண்டிகைகளையும் நியாயப்பிரமணங்களையும் கடைபிடிப்பதால் என்ன ஆகிவிட போகிறது?*

*இது மிகவும் தவறான ஒன்று மிகவும் அபத்தமான ஒன்று ஏனென்றால் சுவிசேஷத்தின் மீது நீங்கள் ஏதாவது கிரியை மூலம் அடைய விரும்பினால் நீங்கள் கிருபையை இழந்தவர்கள் ஆனீர்கள். எனவே அப்படிப்பட்டவர்கள் சபிக்கப்பட்டவர்கள்.*

*பவுல் தீத்துவுக்கும் இதை பற்றி சொல்லுகிறார்.*
***தீத்து 1:10-11**, 10. அநேகர், விசேஷமாய் விருத்தசேதனமுள்ளவர்கள், அடங்காதவர்களும், வீண்பேச்சுக்காரரும், மனதை மயக்குகிறவர்களுமாயிருக் கிறார்கள்.11. அவர்களுடைய வாயை அடக்கவேண்டும்; அவர்கள் இழிவான ஆதாயத்துக்காகத் தகாதவைகளை உபதேசித்து, முழுக்குடும்பங்களையும் கவிழ்த்துப் போடுகிறார்கள்.*

*தேவனிடம் செல்ல ஒரே வழிதான், அதில்*
- *சடங்குகள் இல்லை,*
- *சம்பிரதாயங்கள் இல்லை,*
- *விசேஷித்த விழாக்கள் இல்லை மற்றும்*
- *எந்த மத கோட்பாடுகளும் இல்லை.*

*அதை தான் பவுல் இங்கு சொல்ல முற்படுகிறார்!*

*நிறைய சாத்தானின் தூதர்களால் கள்ள உபதேசம் உபதேசிக்கப்பட்டது. அவைகள் வெளியரங்கம் ஆகித்தான் ஆகவேண்டும். அவர்கள் தேவனின் சாபத்திற்கு என்று நியமிக்கப்பட்டுதான் ஆக வேண்டும்.*

*சபையின் வரலாற்றில் பார்த்தால் உண்மையான விசுவாசிகள் உண்மை உபதேசத்தின் பாதுகாவலனாய் போர் செய்து கொண்டு தான் இருந்தனர்.*

*இப்பொழுது அதை போன்ற காரியங்களை காண முடிவது இல்லையே?*

*யார் முன்னின்று வெளிப்படையாக கள்ள உபதேசத்தை எதிர்த்து போர் செய்வார்?*

*சுவிசேஷம் தாக்கப்படுவதால் இரண்டு முக்கிய காரியங்கள் நடக்கும்.*

1. *கிறிஸ்துவுக்கு மகிமை செலுத்தப்படாது*
2. *பாவிகள் இரட்சிக்கப்பட முடியாது.*

*சுவிசேஷம் மாற்றப்பட்டால் கிறிஸ்து சிலுவையில் செய்த கிரியை கனவீனம் பண்ணப்படும், மற்றும் பாவிகள் இரட்சிக்கப்படும் வழி தடுக்கப்படும்.*

*எனவே கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்யவும் அவரை மகிமைப்படுத்தவும் அவர் செய்த கிரியையில் நோக்கத்தை நிறைவேற்றவும் பவுல் இங்கு சுவிசேஷம் காக்கப்பட முழு பெலனுடன் போராட வேண்டி இருந்தது அது மக்களுக்கு பிடித்தாலும் பிடிக்காவிட்டாலும்.*

*கிறிஸ்துவின் மகிமைக்காகவும் (**காலத்தியர்** 6:14) மற்றும் இனி சுவிசேஷத்தை விசுவாசிக்க போகிறவர்களுக்காகவும் (**காலத்தியர்** 2:5), பவுல் பல கசப்பான உண்மைகளை சொல்ல வேண்டியது இருந்தது.*

*இரட்சிப்பை குறித்து வேற எந்த உபதேசமும் இல்லை எனவே சபை அதற்காக போராட வேண்டியது அவசியம்.*

*நாம் மக்களுக்கு சொல்ல வேண்டியது என்னவெனில் நீங்கள் இயேசு கிறிஸ்துவின் மேல் அன்பு கூறாவிட்டால் சபிக்கப்பட்டவன் ஆவீர்கள்,* **இந்த சத்தியதைத்தான் நாம்**

***பிரகடனப்படுத்தவேண்டும்.*** *அதனால் தான் சுவிசேஷம் என்பது நற்செய்தி ஆகும்.*